36. மெக்காலே கல்விக் குறிப்பு வெளிவந்த ஆண்டு?

(1) 1854 (2) 1853 (3) 1845 (4) 1835

37. காந்தி கிராம கிராமியக் கல்லூரி ஏற்படுத்தப்பட்ட ஆண்டு?

(1) 1845 (2) 1857 (3) 1855 (4) 1975

38. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்?

(1) ஈரோடு (2) திருவாரூர் (3) சென்னை (4) சிதம்பரம்

39. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு?

(1) 1857 (2) 1835 (3) 1876 (4) 1887

40. உள்ளூர் வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ?

(1) 1882 (2) 1832 (3) 1852 (4) 1872

41. அறிவு என்ற சொல் எதில் இருந்து பெறப்பட்டது ______.

(1) வித் (2) பட்டு (3) சத்து (4) படிப்பு

42. வித் என்பதன் பொருள் ______.

(1) படித்தல் (2) அறிதல் (3) விதைத்தல் (4) விளக்குதல்

43. குருகுலங்களில் பெரும்பாலானவை, பின்வரும் யாரின் பெயரால் அழைக்கப்பட்டன?

(1) மன்னர்கள் (2) புலவர்கள் (3) முனிவர்கள் (4) தலைவர்கள்

44. பின்வருவனவற்றுள் எது தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி?

(1) ஜாவா (2) நேபாளம் (3) தட்சசீலம் (4) பர்மா

LIVEWORKSHEETS

45. _______ பல்கலைக்கழகங்கள் கோயில்களின் தொடர்புடன் மேம்பாடு அடைந்தன.

(அ). பனாரஸ் (ஆ). மதுரை (இ). காஞ்சி (ஈ). இலங்கை

(1) அ, ஈ (2) ஆ, இ (3) அ, இ (4) ஆ, ஈ

46. பின்வருவனவற்றில் கற்பித்தலின் அடிப்படை வழிமுறைகள் எவை?

(அ). படித்தல் (ஆ). விளையாடுதல்

(இ). கலந்தாலோசித்தல் (ஈ). விவாதங்கள்

(1) அ, ஈ (2) ஆ, இ (3) அ, இ (4) இ, ஈ

47. உலகின் பழமையான பல்கலைக்கழகம் _______.

(1) நாளந்தா (2) டெல்லி (3) சென்னை (4) அண்ணாமலை

48. ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளியைத் தொடங்கியவர்கள் _______.

(அ). சேவியர் (2) டேவிட் (3) சீகன்பால்கு (4) புளூட்சோ

(1) அ, ஈ (2) ஆ, இ (3) ஈ, இ (4) அ, இ

49. ஹண்டர் குழு எக்கல்விக்கு முக்கியத்துவம் தந்தது?

(1) ஆரம்பக் கல்வி (2) குருகுலக் கல்வி

(3) இடைநிலைக் கல்வி (4) வயதுவந்தோர் கல்வி

50. தட்சசீலப் பல்கலைக் கழகத்தின் இடிபாடுகள் எப்போது கண்டுபிடிக்கப்பட்டன?

(1) 20 ம் நூற்றாண்டு (2) 17 ம் நூற்றாண்டு

(3) 18 ம் நூற்றாண்டு (4) 19 ம் நூற்றாண்டு

51. கூற்று :ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம் என அழைக்கப்படுவது உட்ஸ் கல்வி அறிக்கை.

காரணம் :எல்லாத் தரப்பினருக்கும் கல்வி வழங்கும் முதல் அறிக்கை இதுவாகும்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று சரி, காரணம் சரி

LIVEWORKSHEETS

(3) காரணம் கூற்றை விளக்கவில்லை. (4) கூற்று தவறு

52. சார்ஜண்ட் அறிக்கை தயாரிக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1944 (2) 1942 (3) 1844 (4) 1947

53. நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பைப் பரிந்துரை செய்த குழு எது?

(1) வார்தா கல்விக்குழு (2) டி எஸ் கோத்தாரி கல்விக் குழு

(3) ஹண்டர் கல்விக் குழு (4) உட்ஸ் கல்வி அறிக்கை

54. ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) சாலபோகம் (2) பெருஞ்சாலை (3) குருகுலம் (4) பாடசாலை

55. இரண்டாம் சரபோஜி காலத்தில், தஞ்சாவூரில் அச்சுக்கூடத்தில் பயன்படுத்திய எழுத்துமுறை

(1) தேவநாகரி (2) உட்ஸ் (3) பளிங்கு (4) பிம்பம்

56. ______ ஆம் ஆண்டின் சர் சார்லஸ் உட்ஸ் கல்வி அறிக்கை, இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் "மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது (NMMS 2019-20)

(1) 1854 (2) 1856 (3) 1864 (4) 1866

57. `எவ்வகைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு RMSA வின் இடைநிலைக் கல்வி உருவாக்கப்பட்டது?

(1) எளிதில் கிடைக்கக் கூடிய கல்வி (2) தரமான கல்வி

(3) எளிய அணுகுமுறையுடன் கூடிய கல்வி (4) இவை அனைத்தும்

58. கல்வி உரிமைச் சட்டம் ____ வயது முதல் ____ வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.

(1) 4, 14 (2) 6, 14 (3) 5, 14 (4) 3, 14

LIVEWORKSHEETS

59. தற்போது கல்வித்துறை __________ பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

(1) மாநிலப் பட்டியல் (2) சிறப்புப் பட்டியல்

(3) பொதுப் பட்டியல் (4) மத்தியப் பட்டியல்

60. ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனம் பொ.ஆ. ________ இல் தோற்றுவிக்கப் பட்டது.

(1) 1500 (2) 1675 (3) 1664 (4) 1600

61. இந்தியாவிற்கு ஐரோப்பியர்கள் எதற்காக வந்தனர்?

(1) நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக (2) ஆட்சி அமைப்பதற்காக

(3) வணிகம் செய்வதற்காக (4) தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக

62. தட்சசீலம் ____________ இல் அமைந்துள்ளது.

(1) பாகிஸ்தான் (2) நேபாளம் (3) ஆப்கானிஸ்தான் (4) இந்தியா

63. குருகுலக் கல்வி அமைப்பின் முக்கிய நோக்கங்கள்

(1) முழுமையான கற்றல் (2) ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்தல்.

(3) உள்ளார்ந்த திறமையை உணரவைத்தல் (4) இவை அனைத்தும்

64. பின்வருவனவற்றுள் குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

(1) வல்லபி (2) விக்கிரமசீலா (3) அண்ணாமலை (4) ஓடண்டாபுரி

65. தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள பழமையான பல்கலைக் கழகம் எது?

(1) தட்சசீலம் (2) நாளந்தா (3) வல்லபி (4) விக்கிரமசீலா

66. முஸ்லிம் ஆட்சியாளர்கள் பள்ளிகளை நிறுவ ஆரம்பித்த நூற்றாண்டு

(1) 11 (2) 16 (3) 19 (4) 18

67. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மதரசாக்களின் முக்கிய நோக்கம் தகுதியான அறிஞர்களுக்குக் குடிமைப் பணிக்கான பயிற்சியை அளித்தல்.

(2) பண்டைய இந்தியாவில் குழுக்கற்றல் முறை நடைமுறையில் இருந்தது.

LIVEWORKSHEETS

(3) தட்சசீலப் பல்கலைக் கழகம், நாகரிகங்களுக்கு இடையேயான தொடர்பு மையமாகக் கருதப்படுகிறது.

(4) ஆரம்பக் காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி, கல்வியில் அலட்சியம் மற்றும் குறுக்கீடு இன்மை கொள்கையைப் பின்பற்றியது.

68. இடைக்கால இந்தியாவில் கல்வி முறையானது, யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?

(1) மிஷனரி (2) உலோமா (3) சுல்தான்கள் (4) பேராயர்கள்

69. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) இடைக்கால இந்தியாவில் பெண்கள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை.

(2) இடைக்கால இந்தியாவில் கல்வியானது சமயம் சார்ந்ததாக இருந்தது.

(3) இஸ்லாமியர்களின் ஆட்சியில் மருத்துவம், வானியல் போன்ற துறைகள் மேம்பட்டன.

(4) இஸ்லாமியர்கள் வருகைக்கு முன்னரே இந்தியாவில் ஒரு மேம்பட்ட கல்விமுறை நடைமுறையில் இருந்தது.

70. அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்த அரசர் ______.

(1) இல்துத்மிஷ் (2) ராஜா ஜெய்சிங் (3) இரண்டாம் சரபோஜி (4) அக்பர்

LIVEWORKSHEETS